முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இடைநிலை மனு எண்.01/2025**

**IN**

**அசல் வழக்கு எண்.353/2015**

1. சகாயராஜ்
2. இசக்கிமுத்து ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. பாலம்மாள்
2. சுப்பையா
3. பட்டாணி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 31.07.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.தங்கமணி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17–ன்படி, மனுவில் கண்ட விவரப்படி தாவா அசல் வழக்கை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.12 15:05:57 +0530

1) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u> :–**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், அசல் வழக்கானது தாவா 1ம் தபசில் சொத்துக்களை 1ம் வாதிக்கு பாதியப்பட்டது என விளம்புகை செய்யக்கேட்டும், தாவா 2ம் தபசில் சொத்து 2ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கேட்டும், பிராது தபசில் சொத்துக்களில் வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கேட்டும், மேலும் தபசில் சொத்துக்களை பொறுத்து அசல் வழக்கு எண்.87/1996 வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையும் அதனை தொடர்ந்து EP.No.27/2010 பிறப்பித்துள்ள உத்தரவும் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக்கேட்டும், தாவா தபசில் சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக்கேட்டும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் கடந்த 05.09.2024ம் நாள் இந்நீதிமன்றமானது அசல் வழக்கின் வழக்குரையில் கோரியுள்ள "இ" பரிகாரத்தை பொறுத்து வாதிகள் ரத்து செய்யக்கோரும் தீர்ப்பாணையில் கண்டுள்ள மதிப்பை ரூ.8,680/–க்கு வழக்கை மதிப்பீடு செய்து ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் போக மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்த உத்தரவிடப்பட்டது என்றும், அதனடிப்படையில் கடந்த 18.06.2025ம் நாள் ஏற்கனவே "இ" பரிகாரத்திற்கு செலுத்தியுள்ள தொகையான ரூ.75.50/– தவிர்த்து மீதி தொகையான ரூ.8,605/– ஆனது நீதிமன்ற கட்டணமாக இந்நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே தாவா அசல் வழக்கின் வழக்குரையில் நீதிமன்ற முத்திரை கட்டணத்தில் வழக்கின் மதிப்பீடானது சீர்திருத்தம் செய்யப்படவேண்டியது அவசியமாக உள்ளது என்றும், இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை என்றும், ஆகவே, மனுவில் கண்ட விவரப்படி தாவா அசல் வழக்கை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2025.08.12 15:06:04 +0530

2. இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது மனுவில் கண்ட விவரப்படி தாவா அசல் வழக்கை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர்கள் தரப்பில் கடந்த 05.09.2024ம் நாள் இந்நீதிமன்றமானது அசல் வழக்கின் வழக்குரையில் கோரியுள்ள "இ" பரிகாரத்தை பொறுத்து வாதிகள் ரத்து செய்யக்கோரும் தீர்ப்பாணையில் கண்டுள்ள மதிப்பை ரூ.8,680/−க்கு வழக்கை மதிப்பீடு செய்து ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் போக மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்த உத்தரவிடப்பட்டது என்றும், அதனடிப்படையில் கடந்த 18.06.2025ம் நாள் ஏற்கனவே "இ" பரிகாரத்திற்கு செலுத்தியுள்ள தொகையான ரூ.75.50/− தவிர்த்து மீதி தொகையான ரூ.8,605/− ஆனது நீதிமன்ற கட்டணமாக இந்நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே தாவா அசல் வழக்கின் வழக்குரையில் நீதிமன்ற முத்திரை கட்டணத்தில் வழக்கின் மதிப்பீடானது சீர்திருத்தம் செய்யப்படவேண்டியது அவசியமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, இந்நீதிமன்றத்தால் 05.09.2024ல் "வாதிகள் 15 நாட்களுக்குள் வழக்குரையில் கோரியுள்ள "இ" பரிகாரத்தை பொறுத்து வாதிகள் ரத்து செய்யக்கோரும் தீர்ப்பாணையில் கண்டுள்ள ரூ.8680/−க்கு வழக்கை மதிப்பீடு செய்து, ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம்போக மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்த வேண்டும்" என உத்தரவிடப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.12 15:06:12 +0530

8) மேற்கண்ட உத்தரவின்படி மனுதாரர்கள் தரப்பில் "இ" பரிகாரமானது ரூ.8,605/- என மதிப்பீடு செய்யப்பட்டு ஏற்கனவே செலுத்தப்பட்ட நீதிமன்ற முத்திரை கட்டணம் ரூ.75.50/- போக மீதி ரூ.655/- செலுத்துவதற்கு பதிலாக ரூ.8,605/- செலுத்தப்பட்டுள்ளது.

9) இந்நிலையில், மனுவில் கண்டவாறு வழக்குரையில் "பிராது பக்கம் 8 ல் பாரா 9ல் நீதிமன்ற முத்திரை கட்டணம் பகுதியில் குறிப்பிட்டுள்ள "இ" பரிகாரத்திற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 40-ன் படி தபசில் சொத்துக்களின் குறைந்த பட்ச மதிப்பாக ரூ.1000/-ன் பேரில் ரூ.8680/-க்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணமாக ரூ655/- செலுத்துவதற்கு பதிலாக ரூ.8605/- செலுத்தப்பட்டுள்ளது என சீர்திருத்தம் செய்யவேண்டும்" என்று பிரதான வழக்குரையை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டம் ஏற்படப்போவதில்லை. மேலும் இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

10) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

11) <u>**இறுதியாக:-**</u>

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.12 15:06:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**

– இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.12 15:06:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.01/2025
in
O.S.No.353/2015
உத்தரவு (Draft / Fair)
நாள் : 12.08.2025